DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.149/2024**

**P.W.1**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | கண்ணு |
| Father Name | : | கருப்பையா |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.03.2026.

( 1வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2வது எதிரி ஆஜர்.)

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது பி7 சிந்தாமணி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் இ3 அண்ணாநகர் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரியும் போது 13.08.2023ம் தேதி காலை 06.45 மணிக்கு அண்ணாநகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் **சாட்சி எண்.3** திரு.மோகன்தாஸ் மற்றும் முதல்நிலை காவலர் 3414 சாட்சி எண்.2 மகேஷ் ஆகியோர்களுடன் அண்ணாநகர் காவல்நிலைய சரக ரோந்து செல்லும் போது, வண்டியூர் சங்கு நகர், இரட்டை புளியமரம் அருகில் கருவேல முட்புதரில் இருவர் ஆயுதங்களுடன் மறைந்து உட்கார்ந்திருந்தார்கள். எங்களை பார்த்தவுடன் தப்பி ஓட முயன்றனர். தப்பி ஓட முயன்றவர்களை போலீஸ் பார்ட்டியுடன் மடக்கி பிடித்து எங்களது அடையாள அட்டையை காண்பித்து அவர்களை பற்றி விசாரித்தோம். மாரிமுத்து என்ற எலி மாரிமுத்து, வயது 27, த/பெ.பூமிநாதன் செம்மண் சாலை, தீர்த்தகாடு, வண்டியூர் என்றும், 2வதாக சரவணக்குமார் என்ற சாட் சரவணன் என்றும் வயது 24 என்றும் த/பெ.முருகன் எ171, செண்பக தோட்டம், அண்ணாநகர், மதுரை என்று கூறினார். மேலும் எங்களுக்கு அண்ணாநகர் காவல்நிலையத்தில் H.S உள்ளதாகவும் கொலை,

அடிதடி, கஞ்சா, கொலை முயற்சி வழக்குகள் உள்ளதால் எங்கள் எதிரிகள் எப்போதாவது எங்களை எதுவும் செய்துவிடுவார்கள் என்பதால், அப்படி எதாவது செய்ய வந்தால் அவர்களை கொலை செய்ய தயாராக அரிவாள் வைத்திருந்ததாக கூறியவர்களை காரணம் கூறி அதே இடத்தில் காலை 07.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் அவர்கள் கைது செய்தார். மாரி முத்து என்ற எலி மாரிமுத்து தானாக முன்வந்து 07.15 மணிக்கு எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எலி மாரிமுத்து மற்றும் நாங்களும் கையொப்பம் செய்தோம். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான், அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சரவணன் என்ற சாட் சரவணன் தானாக வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 07.45 மணிக்கு அதே இடத்தில் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்களும் மற்றும் சரவணன் என்ற சாட் சரவணனும் கையொப்பம் செய்தோம். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான், அது **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 1வது எதிரி மாரிமுத்து என்ற எலி மாரிமுத்து கருவேல முட்புதரில் வீசிய அரிவாளை எடுத்து ஆஜர் செய்தார். அதை 08.15 மணிக்கு அத்தாட்சியில் சார்வு ஆய்வாளர் அவர்கள் கைபற்றினார்கள். மேற்படி அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான், அது **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 08.45மணிக்கு சரவணன் என்ற சாட் சரவணன் கருவேல முட்புதரில் வீசிய அரிவாளை எடுத்து ஆஜர் செய்தார். அதை 08.45 மணிக்கு அத்தாட்சியில் சார்வு ஆய்வாளர் அவர்கள் கைபற்றினார்கள். மேற்படி அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான், அது **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றபட்ட சொத்துகளுடன் 10.00 மணிக்கு நிலையம் வந்து குற்ற சம்பவ செய்யும் நோக்குடன் இருந்த காரணத்திற்காகவும், ஆயுதம் வைத்திருந்த குற்றத்திற்காகவும் நிலைய குற்ற எண்.540/2023 பிரிவு 25 (1A) Arms Act ன்படி வழக்கு பதிவு செய்தார். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

காவல்நிலையத்தில் தினமும் காலை 07.00 மணிக்கு ரோல் கால் நடக்கும் என்றால் சரிதான். மேற்படி ரோல் காலில் யார் யாருக்கு என்ன பணி என்பது ஒதுக்கப்படும் என்றால் சரிதான். எங்களுடைய பணி குறித்த விபரங்களை எங்களுடைய பாக்கெட் நோட்டில் குறித்து வைப்போம் என்றால் சரிதான். ரோந்து பணி செல்லும் போது குறிப்பிட்ட முக்கிய இடங்களில் ரோந்து பணி வருகை குறித்து பட்டா புத்தகம் பராமரிக்கப்படும் அதில் தேதி, விபரம் எழுதி கையொப்பம் செய்வோம் என்றால் சரிதான். சரித்திர பதிவேடு குற்றவாளிகளை கண்காணிக்க காவல்நிலையத்தில் தனிபிரிவு உள்ளது என்றால், சரிதான். மேற்படி சரித்திர பதிவேடு குற்றவாளிகள் சம்மந்தப்பட்ட தகவல்களை காவல்நிலைய ஆய்வாளருக்கு தினமும் மேற்படி தனிபிரிவு தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு எதிரிகள் எங்கள் காவல்நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளிகள் என்றால் சரிதான். என்னை காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்த போது என்னுடைய நோட் புத்தகத்தையோ அல்லது பட்டா புத்தகத்தையும் காண்பிக்கவில்லை. 1வது எதிரி மீது இதே காவல்நிலையத்தில் இந்த வழக்கு சம்பவ இடத்தில் வைத்து ஆயுதங்கள் வைத்திருந்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், ஞாபகமில்லை. இந்த வழக்கின் ஆவணங்கள் நான் தயார் செய்யவில்லை என்றால், சரிதான். அ.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் எந்த இடத்தில் வைத்து எந்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. இரட்டை புளியமரம் என்பது நிறைய மக்கள் குடியிருக்கும் பகுதி என்றால், சற்று தொலைவில் உள்ளது. இரட்டை புளியமரத்திற்கு அருகில் மாரியம்மன் கோவில் உள்ளது என்றால், எனக்கு ஞாபகமில்லை. நாங்கள் சென்ற போது சம்பவ இடத்தில் இருந்து எதிரிகள் ஓட முயற்சித்தார்கள். நாங்கள் மூன்று பேரும் மூன்று தனி தனி இருசக்கர வாகனத்தில் சென்றோம். எதிரிகளை என்னுடைய வாகனத்தில் காவல்நிலையத்திற்கு அழைத்து வரவில்லை. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அரிவாளுக்கு தனிப்பட்ட அடையாளம் எதுவும் குறிப்பிடவில்லை. மேற்படி அரிவாள் பொதுவாக

சந்தையில் கிடைக்ககூடிய என்றால், தெரியவில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன விதத்தில் இந்த வழக்கு சம்பவத்தில் ரோந்து செல்லவில்லை என்றும், எதிரிகளை நாங்கள் கைது செய்யவும் இல்லை என்றும், காவல்நிலைய கணக்கெடுப்பிற்காக பின்னிட்டு, காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு என்னையும் ஒரு சாட்சியாக போடப்பட்டு அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ பகுதி என்பது திறந்த வெளி பகுதி என்றால், முள்புதர் பகுதியாகும், ஆனால் யார் வேண்டுமானாலும் செல்லலாம். சம்பவ இடத்தில் வைத்த கைப்பற்றபட்ட சான்றுபொருட்கள் சீல் வைக்கப்படவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. அத்தாட்சி கைப்பற்றபட்ட பின்பு தான் காவல்நிலையம் வந்தோம். அதன்பிறகு தான் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்களில் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

**2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** : 1வது எதிரி தரப்பில் மேற்கொள்ளப்பட்ட குறுக்கு விசாரணையை 2வது எதிரி தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.23 17:17:12 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**

**மதுரை.**